[1993 அக்டோபர் 29

முற்பகல் 10-35

<u>மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்:</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய கரும்புக்கு விலையை நிர்ணயம் செய்வதே மத்திய அரசு தான். ஒவ்வோராண்டும் மத்திய அரசு கரும்பினுடைய விலையை நிர்ணயம் செய்கிறது. அந்த விலை விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகவில்லை என்பதைக் கருத்திற் கொண்டுதான் தமிழக அரசு ஒவ்வோராண்டும் தன்னுடைய பரிந்துரை விலையாகக் கூடுதலாக விலையை நிர்ணயம் செய்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்கள் கேள்வியைக் கேட்கின்றபொழுது, சென்ற ஆண்டு மொலாசஸ் என்பது அரசினுடைய கட்டுப்பாட்டுக்குள் இருந்தது, இந்த ஆண்டு மத்திய அரசு தன்னுடைய கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்ததன் காரணமாக மொலாசசினுடைய விலை ஏறத்தாழ 2,000 ரூபாய் வரை அதிகப்படியாக விற்றுக்கொண்டிருக்கிறது. இதனை அரசு கருத்திற் கொள்ளுமா என கேள்வி எழுப்பினார்கள். இதைத் தான் மாண்புமிகு உறுப்பினர் ஈஸ்வரனுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இந்த நிலையை மத்திய அரசு தெரிந்தும்கூட சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு வெறும் 35 ரூபாயை மட்டுமே கூட்டிக் கொடுத்திருக்கிறது மத்திய அரசு. எனவே, விவசாயிகளுடைய நலனைக் கருத்திற்கொண்டு அதிக விலையைத் தருகின்ற ஒரே அரசு இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அரசு தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> வினா எண். 71 திருமதி தே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர்.

71—

<u>ஈசநத்தத்தில் கால்நடை மருத்துவமனை</u>

*<u>20032—திருமதி கே. மரியம் உல் ஆசியா:</u> மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம் ஈசநத்தத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

<u>மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத்துறை</u> அமைச்சர் மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1993 அக்டோபர் 29]

(அ) மற்றும் (ஆ) கரூர் வட்டம் ஈசநத்தத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு தற்பொழுது இல்லை.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே மாண்புமிகு அமைச்சரவர்கள், தன்னுடைய முதல் பதிலுரையிலேயே செயற்குறிப்பு இல்லை என்று சொல்லி விட்டார்கள். இருந்தாலும் என்னுடைய அடுத்த வினாவைத் தொடுப்பதற்கு முன் அதே ஈசநத்தம் கிராமத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்தக் கிராமத்திலுள்ள அருள்மிகு இளம் பிள்ளை அம்மன் கோயில் திருமண மண்டபம் கட்டுவதற்காக ரூபாய் ஏழரை இலட்சம் அனுமதி அளித்த மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் சார்பாகவும், அந்தப் பகுதி மக்களின் சார்பாகவும் மனமார நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்தத் திருமண மண்டபம் கட்டுவதற் காக அவர்கள் அனுமதி அளித்ததற்காகக் கட்சி சார்பின்றி அனைத்து மக்களாலும் தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பாராட்டுதலைப் பெற்று கொண்டிருக்கிறார்கள் என் பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட ஒரு முக்கியத்துவம் வாய்ந்த அந்த ஈசநத்தம் கிராமத்தில், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதியிலேயும் சரி, அதே நேரத்திலே தங்களுடைய தொகுதியான வேட சந்தூர் தொகுதியில் சுற்றியுள்ள—அதாவது ஈசநத்தம் கிராமத் தைத் சுற்றியுள்ள தங்களுடைய வேடசந்தூர் தொகுதியில் உள்ள பகுதி மக்களும் பயன்பெறும் வகையிலே இந்தக் கால் நடை மருத்துவமனையை ஈசநத்தம் கிராமத்தில் அமைத்துக் தந்தால், இரண்டு தொகுதி மக்களும் அதனால் பயன் பெறு வார்கள் என்று நினைத்துத் தான் இந்தக் கேள்வியைத் தொடுத் தேன். ஆகவே, இதை அரசு மீண்டும் பரிசீலனை செய்து இந்த ஈசநத்தம் கிராமத்திலே கால்நடை மருத்துவ மனையை அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சரவர்கள், இதில் என்னுடைய பகுதியும் பயன் பெறுகின்ற காரணத்தினாலே, சற்றுக் கனிவோடு இத னைப் பரிசீலிக்க நானும் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

முற்பகல் 10-40

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் உள்ள அரவக்குறிச்சி ஒன்றியத்தில் அரவக்குறிச்சி மற்றும் ஆண்டிப் பட்டிக் கோட்டை ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்கள்

ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன. பொதுவாக, கிராமங்களிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டும், அந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கனவே செயல்பட்டு வரும் கால்நடை நிலையைங்களைக் கருத்திற் கொண்டும் கால்நடை மருந்தகம் துவக்கப்படவுள்ள கிராமத்திற்கும், ஒன்றியத்தில் ஏற்கனவே செயல்பட்டு வருகிற கால்நடை நிலையங்களுக்கும் இடையேயுள்ள தூரத்தைக் கருத்திற் கொண்டும் கால்நடை மருந்தகங்கள் துவக்கப்படுகின்றன. கால்நடை மருந்தகம் ஓரிடத்தில் துவக்கப்பட வேண்டுமானால், கீழ்க்கண்ட நிபந்தனைகளை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் நிறைவேற்றித் தர வேண்டும், கால்நடை மருந்தகம் துவக்கக் கோரும் கிராமத்தின் பெயரைக் குறிப்பிட்டு, அந்தக் கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைத்துத் தருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும். கால்நடை மருந்தகத்திற்கான கட்டிடம் கட்ட குறைந்தது ஒரு ஏக்கர் நிலமாவது கால்நடைத் துறைக்கு இனாமாக அளிப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றித் தரப்பட வேண்டும். கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்டி முடிக்கும் வரை, மருந்தகம் செயல்படுவதற்கு வாடகையில்லாக் கட்டிடம் அளிப்பதற்கு சம்பந்தப்பட்டவருடைய ஒப்புதல் கடிதத்துடன் கூடிய ஊராட்சி ஒன்றியத் தீர்மானம் நிறைவேற்றித் தரப்பட வேண்டும். இப்படிப்பட்ட நிபந்தனைகளை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் நிறைவேற்றித் தருமானால், அடுத்த ஆண்டு இதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டிக் கோட்டையில் கால்நடை மருத்துவமனை இருப்பதாகச் சொன்னார்கள். ஆண்டிபட்டிக் கோட்டைக்குச் செல்ல வேண்டுமென்றால் 15 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். அதேபோல், அரவக்குறிச்சி செல்லவேண்டுமென்றால், 18 கிலோ மீட்டர் செல்ல வேண்டும் இந்த ஈசநத்தம் கிராமத்தைச் சுற்றி எருமார்பட்டி, தத்துப்பட்டி, அம்மாப்பட்டி ஆகிய பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. எங்கேயுமே கால்நடை மருத்துவமனை இல்லை. அப்பகுதி மக்கள் விவசாயத் தொழிலையும், கால்நடை வளர்ப்புத் தொழிலையும் அதிகமாக மேற்கொண்டு இருப்பதன் காரணமாக, ஈசநத்தம் கிராமத்தினுடைய அதிமுக்கியத்துவத்தைக் கருதி, அடுத்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே கால்நடை மருத்துவ மனையைக் கொண்டுவர ஆவன செய்வார்களா அதற்குப் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில நிபந்தனைகளை நான் சொல்லியிருக்கிறேன். அந்த நிபந்தனைகளுக்குட்பட்டு இருக்குமானால், நிச்சயமாக அடுத்த ஆண்டு பரிசீலிக்கப்படும்.

1993 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண். 72, திரு. செ. பெருமாள் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

72—

ஏற்காடு தொகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

*9605—திரு. செ. பெருமாள்:

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் இல்லை என்ற சொல்லுக்கே இடமில்லை என்ற சொற்களுக்கேற்ப, எனது தொகுதியிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கான உத்தரவினைப் பிறப்பித்து, நிதியையும் ஒதுக்கித் தந்து, 1994-ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிப்பதற்கு உறுதியை வழங்கியிருக்கிறார்கள். அதற்காக, தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்த சர்க்கரை ஆலையை அமைப்பதற்கு அங்குள்ள பொதுமக்கள், ''நீங்கள் சப்-பவர் ஸ்டேஷனைக் கொண்டு வந்து விட்டீர்கள்; இங்கு வாழ்கின்ற மக்கள் விவசாயிகள்; பெரும்பாலும், விவசாயத்தையே நம்பியிருக்கிறார்கள்; அந்தக் குறையைத் தீர்த்துவிட்டீர்கள்; அதேபோல், இங்கு சர்க்கரை ஆலையைக் கொண்டு வந்தால், இந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் பயனடைவார்கள்; நீங்கள் எப்படியாவது முதலமைச்சரிடத்திலாவது, அமைச்சரிடத்திலாவது கூறி இது வருவதற்கு நீங்கள் முயற்சி செய்ய வேண்டும்'' என்பதை என்னிடத்திலே குறையாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்று கேட்டால்.......